# தமிழ் நாடு வணிகர் நல வாரியம்

1989-1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வணிக பெருமக்களுக்கும் பயன் தரும் வகையில் ‘‘தமிழ் நாடு வணிகர் நல வாரியம்‘‘ அமைக்கப்பெற்று இயங்கி வருகிறது.

வணிகர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட தமிழ் நாடு வணிகர் நல வாரியம், முதலமைச்சர் அவர்களின் தலைமையில், கீழ்க் காணும் உறுப்பினர் களைக் கொண்டு இயங்கி வருகிறது:-

1. மாண்புமிகு தமிழக முதல்வர் – தலைவர்
2. வணிகவரித் துறை அமைச்சர் – துணைத் தலைவர்
3. <u>அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்:-</u>

    1) அரசுச் செயலாளர் (வணிக வரித் துறை)

    2) வணிக வரி ஆணையர்

    3) சிறப்புச் செயலாளர் (நிதித் துறை)

    4) அரசுச் செயலாளர் (தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை)

    5) உறுப்பினர் செயலராக ( அலுவல் வழி) வாரியத்தின்முதன்மை செயல் அலுவலர் செயல்படுவார்.

4. <u>அலுவல் சாரா உறுப்பினர்கள் – 20 நபர்கள் ஆகும்.</u>

1) திரு R. சொக்கர்
2) திரு S. ரத்தினவேலு
3) திரு M. மகேந்திரன்
4) திரு A. ஜெயசீலன்
5) திரு எ. எ. சத்தார்
6) திரு L. ஞானராஜ்
7) திரு M.R. சுப்பிரமணியன்
8) திரு A. அந்தோணிசாமி
9) திரு C. நவமணி
10) திரு சேப்பாக்கம் வி. பி. மணி
11) திரு D. சண்முகம்
12) திரு மயிலை C. பெரியசாமி
13) திரு C. கிருஷ்ணன்
14) திரு T. கிருஷ்ணசாமி
15) திரு N.S. இளங்கோவன்
16) திரு T.K.S.P.A.சண்முகமூர்த்தி
17) திரு சி. பாலசுப்பிரமணியம்,
18) திரு S. ஹீராலால்
19) திரு ஏ. தங்கராஜ்
20) திரு ஏ. தனம்

இவ்வாரிய அலுவலகத்தில் கீழ்க் காணும் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

1. இணை ஆணையர் (வணிக வரிகள்)/
   முதன்மை செயல் அலுவலர்
2. கண்காணிப்பாளர்
3. கணக்கர்
4. உதவியாளர்
5. இளநிலை உதவியாளர்
6. சுருக்கெழுத்து தட்டச்சர்
7. ஊர்தி ஓட்டுநர்
8. அலுவலக உதவியாளர்கள் – 3
9. நாட்காவலர்

இவ்வாரியம் துவங்கப்படும்பொழுது, வணிகர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்காகவும் அரசாணை எண். 332 வணிக வரி மற்றும் அறநிலையத் துறை நாள் 11–05–1989 மற்றும் அரசாணை எண் G.O. (Ms.) No.725 C.T. & R.E. Dept. dt. 25-09-1989 ஆகியவற்றில் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை பாரத ரிசர்வ் வங்கியில் (Reserve Bank of India) நிரந்தர வைப்பு நிதியாக வைக்கப்பட்டு அவற்றிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகையை கொண்டும்; மற்றும் உறுப்பினர்களாக சேர்க்கப்படும் பதிவுப்பெற்ற வணிகர்களிடம் இருந்து பெறப்படும் ஆயுட்கால சந்தா தொகையாக ரூ.250/– மற்றும் இச் சந்தா தொகைக்கு இணையாக அரசிடமிருந்து பெறப்படும் மானியத் தொகை (Matching Grant Amount) ஆகியவைகளைக் கொண்டும் இவ்வாரிய உறுப்பினர்களுக்கு (பதிவு பெற்ற வணிகர்களுக்கு) கீழ்க்காணும் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

1. குடும்பநலத் திட்டம்:

வாரியத்தின் உறுப்பினர்களுக்கு மரணம் ஏற்படில் அவரின் குடும்பத்திற்கு உறுப்பினரின் இறப்பு சான்று,, வாரிசு சான்று மற்றும் வரிவிதிப்பு அலுவலரின் பரிந்துரையின் பேரில் குடும்பத்தின் வறுமைநிலை கருதி உதவித் தொகை ரூ.50,000/– வழங்கப் படுகிறது.

2. மருத்துவ உதவி:

வாரியத்தின் உறுப்பினர்களுக்கு இருதயமாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவ சான்றிதழின் பேரில் ரூ.50,000/– வழங்கப்படுகிறது. மேலும், பெண் உறுப்பினர்களுக்கு ‘ கர்பப்பை’ அறுவை சிகிச்சைக்கு ரூ. 20,000/– ம் வழங்கப்படுகிறது.

அறுவை சிகிச்சைகளுக்கு மட்டுமல்லாமல் இருதயம், சிறுநீரகம் மற்றும் புற்றுநோய்களுக்கு மருந்து சிகிச்சைகளான டயாலிசிஸ், செமோதெரபி, ரேடியேஷன்தெரபி, ஆங்கியோபிளாஸ்டி ஆகியவற்றிக்கும் ரூ.15,000/– வழங்கப்படுகிறது.

3. கல்வி உதவி :

வாரிய உறுப்பினர்களின் ஆயுட்காலத்தில் அவரது பிள்ளைகளில் மகன்/மகள் யாரேனும் ஒருவருக்கு கல்லூரி கல்விக்கு ரூ. 5,000/– ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும், மற்றும் தொழில் கல்வி பயிலுவோருக்கு ரூ 10,000/– ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் வழங்கப்படுகிறது.

4. அதிக மதிப்பெண்:

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களில் வரும் வாரிய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு ஊக்கத் தொகையாக முறையே ரூ.5,000/–, ரூ,3,000/– மற்றும் ரூ.2,000/– வழங்கப்பட்டு வருகிறது.

5. விளையாட்டுப் போட்டி :

உலக அளவில், தேசிய அளவில், மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெறும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகை முறையே ரூ.25,000/–, ரூ.10,000/–, ரூ.5,000/– மற்றும் ரூ.3,000/– வழங்கப் படுகிறது.

6. உடல் ஊனமுற்றோர் உதவி :

விபத்தில் ஒரு கால், ஒரு கை, ஒரு கண் ஊனமுற்ற உறுப்பினருக்கு ரூ.10,000/–மும், இரண்டு கால்கள், இரண்டு கைகள், இரண்டு கண்கள் ஊனமுற்ற உறுப்பினர்களுக்கு ரூ.20,000/–மும் உதவித் தொகையாக மருத்துவச் சான்றிதழின் பேரில் வழங்கப்படுகிறது.

7 நலிவுற்ற வணிகர்களுக்கு நிதி உதவி:

ஏற்கனவே ''நலிவுற்ற வியாபாரிகள்'' என உதவி கோரும் வாரிய உறுப்பினர்களுக்கு மிகவும் பின் தங்கிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட நகரங்களிலிருந்து மட்டும் வரும் விண்ணப்பங்களில் ஆண்டுக்கு பத்து நபர்களுக்கு ரூ.10,000/– உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. இதனை 2,7,2007–ல் அரசாணை வெளியிடப்பட்டு தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி வியாபாரத்தில் மிகவும் நலிவுற்ற நிலையில் உள்ள வாரிய உறுப்பினர்களுக்கு பெட்டிக்கடை வைக்க ரூ.10,000/– வழங்கப்பட்டு வருகிறது.

இது வரை இவ்வாரியத்தில் வணிக உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்டவாறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | நலத்திட்டம் | உதவி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | குடும்ப நல உதவி | 279 | 70.55 |
| 2 | மருத்துவ உதவி | 33 | 7.36 |
| 3 | கல்வி உதவி | 77 | 1.98 |
| 4 | தீ விபத்து உதவி | 29 | 1.45 |
| 5 | விளையாட்டு உதவி | 2 | 0.15 |
| 6 | உயர் மதிப்பெண் உதவி | 6 | 0.20 |
| 7 | உடல் ஊனமுற்றோர் உதவி | 2 | 0.15 |
| 8 | திருமண உதவி (தற்பொழுது நடைமுறையில் இல்லை) | 2 | 0.10 |
| | மொத்தம் | 430 | 81.94 |

இவ்வாரிய உறுப்பினர்களுக்கு தற்போது உறுப்பினர்கள் சேர்க்கை சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகின்றது.